தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | மார்கழி 5 | ஸபர் 11 | இதழ் 311
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 20 - 12 - 80

RECEIVED
1980-12-20
PERIODICALS DIVISION
UNIVERSITY LIBRARY

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
புதிய வகுப்பு ஆரம்பம்
28-12-80
G. C. E. A/L 81
April, August.
விலங்கியல்-
ஜெகானந்தராஜு
பௌதிக இரசாயனம்-
சேதன இரசாயனம்-
அன்ரன் மாஸ்ரர்
இரண்டு பகுதிகளும்
தனித்தனி வகுப்புகளாக
நடைபெறும்.

★ வட்டுக்கோட்டை தபாலகத்தில் சம்பவம்

# துப்பாக்கி முனையில் ரூ. 80,000

# துணிகர கொள்ளை!

## நான்கு துப்பாக்கி இளைஞர் நடத்திய திகில் நாடகம்

(நம்து நிருபர் ரி. எஸ். தர்மசிங்கம்)

**யாழ்ப்பாணத் தலைமைத் தபாலகத்திலிருந்து வட்டுக்கோட்டை தபாலகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட எண்பதினாயிரம் ரூபா ரொக்கப்பணம் நேற்றுக் காலை வட்டுக்கோட்டை தபாலகத்துக்கு முன்பாக நான்கு துப்பாக்கி இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டது!**

**யாழ். பிரதம தபாலகத்தின் பிரதம காசாளர் தமது உதவியாளருடன் காரில் எடுத்துச்சென்ற இப் பணம், துப்பாக்கிவேட்டுகளுக்கு மத்தியில், க்ஷணநேரத்தில் இனம்தெரியாத நான்கு துப்பாக்கி இளைஞர்களினால் சூறையாடப்பட்டது!**

இக்கொள்ளைச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

யாழ் தலைமைத் தபாலகத்தின் பிரதம காசாளர் திரு ரி குணநாயகம், அவரின் உதவியாளர் திரு என். சோமாஸ்கந்தன், யாழ். தபாலகத்தைச் சேர்ந்தவரும் காரைச்செலுத்திச் சென்றவருமான திரு. வி கிட்டினர் ஆகிய மூவரும் நேற்றுக்காலை சுமார் 9-30 மணியளவில் யாழ் தலைமைத் தபாலகத்திலிருந்து எண்பதினாயிரம் ரூபா ரொக்கப்பணத்தை ஒரு பையில் எடுத்துக்கொண்டு வட்டுக்கோட்டைத் தபாலகத்திற்கு 3 ஸ்ரீ 2363 இலக்க மொறிஸ்மைனர் காரில் சென்றனர்

### தபாலகத்தில்

காலை சுமார் 10-30 மணியளவில் காரை வட்டுக்கோட்டை தபாலகத்திற்கு முன்பாக நிறுத்தினர். பணத்தை தபாலகத்தில் ஒப்படைக்கும் பொருட்டு கார்ச்சாரதி திரு. கிட்டினர் பணப்பையை எடுத்துக்கொண்டு காரிலிருந்து இறங்கினர். அவரைத் தொடர்ந்து காசாளரும் காரிலிருந்து இறங்கினர் இருவரும் தபாலக முன்வாசல் கதவை (கேற்றை) தாண்டி உட்சென்றனராம். மூன்றாமவர் காரிலேயே இருந்தாராம். அந்தநேரத்தில் நான்கு இளைஞர்கள் வட்டுக்கோட்டைச் சந்தியிலிருந்து கைத்துப்பாக்கிகளுடன் இவர்களை நோக்கி ஓடிவந்தனராம்.

### நான்கு இளைஞர்கள்

ஓடிவந்தவர்களில் மூவர் நீளக்காற்சட்டையும் ஷேர்ட்டும் அணிந்திருந்தனராம் ஒருவர் சாரமும் ஷேர்ட்டும் அணிந்திருந்தாராம். இவர்கள் நால்வரும் 25 வயதுக்குட்பட்டவர்களென விசாரணையில் தெரியவந்தது.

### சாரதியை மறித்து

தபாலகத்திற்கு பணப்பையுடன் சென்ற சாரதியை நோக்கி வந்த இளைஞர்களில் இருவர் அவரைமறித்து ஒருவர் தாக்கிக்கொண்டே அவரிடமிருந்த பணப்பையைப் பறித்தாராம். திடீர்தாக்குதலில் பணத்தைப் பறிகொடுத்த சாரதி பயத்தால் தபாலகத்திற்குள் ஓடிச்சென்றதாகவும் காசாளரும் பயந்து அவ்விடத்திலிருந்து தபாலகத்திற்குள்

(8-ம் பக்கம் பார்க்க)

## பட்ஜட் நிறைவேறியது

(கொழும்பு)

அடுத்தாண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் 121 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

நேற்று நடைபெற்ற வாக்களிப்பில் வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 140 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் கிடைத்தன. தமிழர் விடுதலைக்கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றின் உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். (கு)

## வடபகுதிக்கு மகாவலி நீர் பூர்வாங்க மதிப்பீடுகள் 82-ல் பூர்த்தியாகும்

### பாராளுமன்றத்தில் 'காமினி' திசநாயக்கா

(கொழும்பு)

மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திருப்புவதற்கான பூர்வாங்க மதிப்பீடுகள் 82-ம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படும் என்று மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

தமது அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

துரித மகாவலித்திட்டத்தின் கீழான சகல திட்டங்களும் 83ம் ஆண்டளவில் பூர்த்தியடைந்துவிடும்.

இத்திட்டங்களின் நிர்மாண வேலைகள் உள்ளூர் வெளியூர் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன அரசிடம் களவுகளையும் மோசடிகளையும்தடுக்கக் கூடிய திருப்திகரமான பாதுகாப்பு சேவை கிடையாது எனவே தான் இந்த நிர்மாண வேலைகள் சிறந்த பாதுகாப்பு சேவைகள் உள்ள தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (இ)

## பரீட்சை கட்டணத்தை ஏற்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சைக்கான (பழைய பாடத்திட்டம்) விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டபோதிலும் இப்பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணங்களை இங்குள்ள தபாற்கந்தோர்களில் ஏற்க மறுக்கின்றனராம்.

விண்ணப்ப முடிவுத்திகதி பற்றித் தமக்கு உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை என அதிகாரிகள் கூறுகின்றனர் என மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். (கி-இ)

## கொஷிஜின் காலமானார்

மாஸ்கோ, டிச 19

சோவியத் யூனியனின் முன்னாள் பிரதமர் திரு அலெக்ஸி கொஷிஜின் காலமானார்.

16 வருடங்கள் பிரதமராக பதவி வகித்த இவர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நோயுற்றதன் காரணமாக தமது பதவியை ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. த

யாழ். எம். எம் சி. க்களின் படி விவகாரம்:

# "எம்.பி.க்கள் அலவன்ஸ்பெறும்போது நாங்கள் பெறுவதில் என்ன தவறு?

— உதவி முதல்வர்

(யாழ்ப்பாணம்)

"உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த மாதாந்த அலவன்ஸை, அரசு ஜனவரி முதல் நிறுத்தப்போவதாகவும், அதனை உள்ளூராட்சிமன்றமே வழங்கவேண்டுமென்றும் அறிவித்துள்ளது. ஆதலால் முன்னைய நடைமுறையை தொடர்ந்து அரசு பின்பற்ற வேண்டும் என்று இச்சபை ஜனாதிபதியையும், உள்ளூராட்சி அமைச்சரையும், நிதி மந்திரியையும் கேட்டுக்கொள்கிறது."

யாழ். மாநகரசபை கூட்டம் முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்தபோது திரு. என். ரி. செல்லத்துரை கொண்டுவந்த மேற்படி தீர்மானம் நிறைவேறியது.

இப்பிரேரணை [illegible] திரு. என். ரி. செல்லத்துரை கூறியதாவது:-

"அரசு சில பல தொல்லைகள் காரணமாக, உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய படியை நிறுத்த முடிவு செய்துள்ளது. உள்ளூராட்சிமன்றங்களே, வரியிறுப்பாளரின் பணத்தில் அப்படியை வழங்குமாறு அரசு பணித்துள்ளது; என்று கட்சி உறுப்பினர்கள் வரியிறுப்பாளர் [illegible] எடுக்கமாட்டார்கள் என்ற முடிவினால், அரசு இதனை மறுபரிசீலனை செய்து முன்போல் வழங்கவேண்டும்."

### "ஊழல்களை ஒழிக்கலாம்"

திரு செல்வநாயகம்: 'அரசு வழங்காவிட்டால் சபை நிதியிலிருந்து இதனை எடுப்பது முறையில்லை.'

திருமதி சுவாமிநாதர்: 'எல்லாரும் வசதிபடைத்தவர்கள் அல்ல. சென்ற காலத்தில் பல அங்கத்தவர்கள் தவறான முறையில் சென்று ஊழலுக்கு இடமளித்துள்ளனர்!

'மக்கள்மீது கூடுதலான வரிகள் போடப்பட்டுள்ளது. இந்த வரிகளைக் கட்ட முடியாமல் வரியிறுப்பாளர் தவிக்கின்றார்கள். இந்த நிலையில் அந்தப் பணத்திலிருந்து உறுப்பினர்கள் அலவன்ஸ் பெறுவது சரியல்ல. ஆனால் அரசு தொடர்ந்து இப்படியை வழங்கினால் ஊழல்களை ஒழித்துக் கட்டலாம்.'

ஜனாப் இமாம்: தேர்தலுக்கு முன்பு இந்த படிவரும் என்று எங்கள் எவருக்கும் தெரியாது. இந்தப் படியை நம்பி நாம் போட்டியிடவில்லை மக்களுக்குச் சேவை செய்யவே இங்கு வந்தோம். தேர்தலுக்குப் பின்னர்கூட படி கிடைக்கும் என

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, பிரப்பம் குள வீதியில் கடைகள் சிறிய சாணித்துண்டுடன் காலியான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. 3/9, பிரப்பங்குள ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7667

தோட்டக்காணி பஸ் ரூட்டில் தண்ணீர் வசதியுடன் ஒட்டுசுட்டானில் விற்பனைக்குண்டு. விலாசம் எஸ் அருமைநாயகம், பிரசாத் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். 76'2

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதிக்கு அண்மையில் நல்ல சுற்றுடல் மத்தியில் அமைந்துள்ள சற்சதுரமான நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. ஒரு பரப்பின் விலை பதினெட்டாயிரம் ரூபாவாகும். தொடர்பு விலாசம்; ஒலிம்பியா ஒட்டோ வேக்ஸ், ஸ்ரேசன் றோட், சுண்ணாகம். 7672

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு' வளவு விற்பனைக்கும், பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சி. கனகரெத்தினம், 465/1 கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். 7666

## பயிற்சி

3 மாத பொது விவசாயப் பயிற்சி 17—25 வயதுடைய இருபாலருக்கும் 19-01-81 ஆரம்பமாகின்றது. ஊதியம் வழங்கப்படும். உடனடியாக விண்ணப்பிக்கவும். முடிவு திகதி 05-01-81 அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி-விவசாய நிறுவனம், மருதனமடம், சுண்ணாகம். 7677

## தேவை

வயலின், வாய்ப்பாட்டு தகமை பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணத்திலுள்ள இசை மன்றத்திற்கு தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல.7652, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 7652

சித்திரத்தில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை. பயிற்சிக் காலம் 6 மாதங்கள். தேர்ச்சி பெற்ற பெண்களுக்கு உடன் வேலைவாய்ப்பு. கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 7649

## கொமிஷனுக்கு

நல்ல நிலைமையில் இயங்கும் பேக்கரி ஒன்று சகல தளபாடங்களுடன் கமிஷன் அடிப்படையில் கொடுக்கப்படும் அல்லது 2 பரப்புக் காணி கட்டிடத்துடன் மேற்படி பேக்கரி விற்பனைக்கும் கொடுக்கலாம். விபரங்களுக்கு: உரிமையாளர், அம்பாள் பேக்கரி, பிள்ளையார் கோவிலடி, அராலி. 7674

## தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடியொன்று நாவலா சந்திக்கும், தட்டாதெரு சந்திக்குமிடையில் 12-12-80 வெள்ளிக்கிழமை இரவு காணமல் போய்விட்டது. இதைக் கண்டெடுப்போர் கீழ்க்கண்ட முகவரிக்கு ஒப்படைக்கவும். இந்த உதவி கண் இழந்தவர் கண்ணைப் பெற்றதற்கு சமமாகும். விளம்பர இலக்கம் 7658, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7658

---

த. சோமசுந்தரம்
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தற் படிவம்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய காரைநகர் பலுகாட்டில் வதிந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம்பிள்ளையின் மரணச் சொத்து விடயமாக,

மரணமெய்தியவர்

சண்முகம் நடராசா,
வேம்படி,
தங்கோடை, காரைநகர்.
மனுதார்.

வழ. இல. தத்துவம் /20

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு தை மாதம் 16ந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
**தா. குலஞானம்,**
பதிவாளர்.

1980 ம் ஆண்டு ஆடிமாதம் 23-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

7664

---

**இ. கமலநாதன்**
சட்டத்தரணி
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி செல்லப்பா கைம்பெண் பவளக்கொடி என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

பொன்னம்பலம் சேனுதிராசா, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன ]
நியாயாதிக்கம் ] இல. 3562

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்

1980 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17 ஆந் திகதியாகிய இன்று தேதியிடப்பட்டது.

7678

---

## இயக்குநர் குழு

(உடுப்பிட்டி)

கட்டைவேலி - நெல்லியடிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது புதிய இயக்குநர்சபை உறுப்பினர் தெரிவுக்கான தேர்தலும் நடைபெற்றது.

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை (பழைய பாடத்திட்டம் ஏப்பிரல் 1981 மீட்டல் வகுப்புகள். வினுக்களும் அவற்றிற்குரிய விடைகளும் என்ற முறையில் நடத்தப்படும்.

விண்ணப்பங்கள் 26-12-80 வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் உறுதிப்பாத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுடன் அக்கடமி காரியாலயத்தில் உள்ளவிண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும். வகுப்புகள் 31-12-80-ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்

தொலைபேசி எண் 617
3/6, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 7679

## பண்டத்தரிப்பு பட்டணசபை
## வேலை விபரம்

பண்டத்தரிப்பு பட்டணசபையின், சந்தை வளவில் நவீன சந்தை, அலுவலகம் நூல் நிலையம் ஆகியவற்றினைக் கொண்ட ஓர் கட்டிடத்தினை அமைப்பதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

மேற்படி வேலைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் பண்டத்தரிப்பு பட்டணசபை அலுவலகத்தில் 31-12-80 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் நன்நம்பிக்கைப் பணமாக ரூபா 1000/-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா. 100/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தில் அல்லது ஏதாவது ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் ரூபா. 100,000/-க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகை வேலைக்குப் பதிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் இணைப்பிரதிகளைக் கொண்டதாக, இருபிரதிகளும் 7-1-81ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக, "விசேட ஆணையாளர்" பட்டணசபை, பண்டத்தரிப்பு" என முகவரியிட்டு, சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ, அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலைக்குரிய பெயர் குறிப்பிட்டு, அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் 9-1-81ம் திகதி முற்பகல் 10-00 மணியளவில் திறக்கப்படும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர் 20-1-81ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக இதற்குரிய பிணைப் பணம் முழுவதையும், பணமாகவோ அன்றிப் பட்டணசபையால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியுடன் ஓர் முறிமை நிறைவேற்றி, மேலும் இவ்வேலையைப் பூர்த்திசெய்து தருவதற்குரிய ஒப்பந்தம் ஒன்றை பட்டணசபையுடன் செய்துகொள்ளல் வேண்டும்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் இவ்வலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**மா. மயில்வாகனம்,**
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு-
பட்டணசபை.

பட்டணசபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
16-12-80. (7680)

---

## மின்விநியோகம்

(உடுப்பிட்டி)

வதிரி — மாலிசந்திப் பகுதி மின்விநியோகத்தில் போதிய வெளிச்சத்தைப்பெறமுடியாது அவதியுற்ற மக்களின் குறை நீங்கியுள்ளது.

இதுவரைகாலமும் வதிரிச் சந்தியிலிருந்து மாலிசந்திவரையும் ஒருமுக மின்னிணைப்பு மூலமே மின்சார விநியோகம் செய்யப்பட்டுவந்தது. இந்த ஒருமுக மின்னிணைப்பின் மூலம் கூடுதலான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதால் குறைந்தளவு மின்சாரத்தினல் போதிய மின்வெளிச்சத்தைப் பெறமுடியாதிருந்து வந்தது. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் நெல்லியடிப் பட்டின சபையிடம் முறையிட்டதைத் தொடர்ந்து வதிரிச் சந்தியிலிருந்து மும்முக மின்னிணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

---

# முக்கிய அறிவித்தல்
## SVP சீவம் ரெயிலறிங் மார்ட்

நவீன சந்தை மேல்மாடி 18-ம் இலக்கத்தில் இயங்கிவரும் SVP சீவம் ரெயிலறிங்மார்ட் நிறுவனத்தின் தற்போதைய பொறுப்பாளரான திரு. K P சின்னப்பன் (ரட்ணம்) என்பவர் 31-12-1980-ம் திகதியுடன் விலகிக்கொள்வதால், இவருடனுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தையல் வேலைகளை இத்திகதிக்கு முன்பாக முடித்துக்கொள்ளுமாறும் தவறின் அவற்றுக்கு நாம் பொறுப்பாளிகளாக இருக்கமாட்டோம் என்றும் இத்தால சகலருக்கும் அறிவித்துக்கொள்கின்றேம்.

# SVP சீவம்
### 14A மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

7687

---

### லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியும் சித்த கலாசாலையும்
### 1981க்கான அனுமதி

1981-க்கான புதிய மாணவர்களைச் சேர்க்கும் விண்ணப்பங்கள் 30-12-1980-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தகமைகள்:-

1. G C. E. O/L சித்தி (விஞ்ஞான பாடங்களில் 3 விசேட சித்திகளுட்பட)
2. வைத்தியப் பரம்பரையில் உள்ளவர்களுக்கு G G E. O/L சித்தி (விஞ்ஞான பாடங்களில் 2 விசேட சித்திகளுட்பட)

விண்ணப்பப்படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் கல்லூரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சகல வகுப்புகளுக்கும் விரிவுரைகள் 7-1-1981 இல் ஆரம்பமாகும்.

ஆணைக்குழு
(யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டது)

127. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 7686

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/ 12701

(இறந்து விட்டார்) சின்னத்தம்பி சின்னத்துரை சுன்னாகம், வழக்காளி
சின்னத்தம்பி அரியகுட்டி, சுன்னாகம்
இறந்துபோன வழக்காளியின் சொத்துக்களுக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இல. பிஓ 383 நியமிக்கப்பட்ட தத்துவகாரன் வழக்காளிகள்

எதிராக

1. சண்முகம் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் கொக்குவில் மேற்கு, கொக்குவில்
2. கந்தையா வயித்திலிங்கம் அளவெட்டி, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வழ. இல 9176-ல் இறந்த வழக்காளி நாகமுத்து கந்தையாவின் சட்டப் பிரதிநிதி எதிராளி
3. சின்னத்தம்பி அரியகுட்டி சுன்னாகம்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் MB 12701-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி, 1981-ம் ஆண்டு தை மீ 23-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 32393/-ம் 13-8-1971 தொடக்கம் 25-4-1972 வரைக்கும் ரூபாய் 22,600/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 680/17.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவில்பற்று யாழ்ப்பாணநகர் முதலாம் பிரிவு பெற்று இறை நடுப்பட்டசாலை அல்லது வங்கிவீடும் சொர்ண மாளிகையும் நிலப்பரப்பு ஐந்தும் குளியன்விரண்டும் (நில. பர. 5 குளி 12 வீடு வரிமதிப்பு எண் 28, 30, 34, 34/1, 34/2, 34/3, 34/4, 34/5, 34/6, 34/7, 34/11, 34/12, 34/13, 34/15, 34/16, 17, 36, 75, 77, 81, 83, 3, 5, 7, 9, 11, 13, 15 இலக்கங்களையுடைய கட்டிடங்களும் கிணறும் வான்டயிர்களும். இந்த நில. பர. 5 குளி 12 க்கும் எல்லை, கிழக்கு 1-ம் குறுக்குத் தெரு, வடக்கு பாசகுவலை வீதி, மேற்கு நயினுமுகமது மரக்காயர் மதார் சாகிப் மரக்காயருக்கும் சகோதாருக்கும் உரிய ஆதனம் தெற்கு கடற்கரை வீதி இதடங்கலும்.

**மு. நவரத்தினராசா,**
கொமிசனர் & விலைமதிப்பாளர்,
யாழ். மாவட்ட நீதிமன்றம்.

..லபதி'
மண்டைதீவு
/681

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் குறைகளை நேரில் அறிய 'மினிக்கச்சேரி' அடுத்தவாரம் நடைபெறுகிறது

(மாவிட்டபுரம்)

கொழும்பிலிருந்து வரும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் அமைச்சைச் சேர்ந்த 20 உயர் அதிகாரிகள் குழுவொன்று இம்மாதம் 25 ம், 26 ம், 27 ம் திகதிகளில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் மினிக்கச்சேரி ஒன்றை நடத்தி பொதுமக்களது குறைகளை நேரில் கேட்டறிய இருக்கிறது.

பிரதமர் வடபகுதிக்கு விஜயம் செய்வதற்கு முன்னோடியாக இடம்பெறும் இம் மினிக்கச்சேரியில், பொது மக்கள் தமது குறைபாடுகளை எடுத்துக் கூறவும், இவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராயவும், இப்பகுதியில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள்பற்றி மதிப்பீடு செய்யவும் வசதி ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரது அமைச்சின்கீழுள்ள வீதியமைப்பு வேலைகள், வீடமைப்புத் திட்டங்கள், கடன் வசதிகள், கட்டடப் பொருட்கள் விநியோகம் உட்பட மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இந்த மினிக்கச்சேரியில் பொதுமக்கள் முறையிட முடியும்.

இம்மாதம் 25 ம், 26 ம், 27 ம் திகதிகளில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இடம்பெறும் இம் மினிக்கச்சேரியில் பிரதமரது அமைச்சின் சாதனைகளை விளக்கும் கண்காட்சியும், படக்காட்சிகளும் இடம்பெறுகின்றன. இங்கு கண்காட்சிக்கு வைக்கப்படும் பொருட்கள் விற்பனைக்கும் விடப்படவுள்ளன. இம்மினிக்கச்சேரிக்கான சகல ஒழுங்குகளையும் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா செய்துவருகிறார்.

கொழும்பிலிருந்து வரும் உயர் அதிகாரிகள் 20 பேரும் தங்குவதற்கு வேண்டிய வசதிகளையும், மினிக்கச்சேரிக்கான ஏற்பாடுகளையும் அவர் துரிதமாக மேற்கொண்டுள்ளார்.

## வீதி புனரமைப்பு

(உடுப்பிட்டி)

சீர்கேடான நிலையில் பயங்கரக்குழிகளுடன் காணப்படும் நெல்லியடிப் பிரதான வீதிகள் திருத்திப் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன. இவ் வீதிச் சீர்கேடுகள்பற்றி உடுப்பிட்டித்தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. எஸ். பொன்னம்பலம் யாழ். மாவட்ட அமைச்சரிடம் புகார் செய்ததைத் தொடர்ந்துபிரஸ்தாப வீதித் திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கடலரிப்பை தடுக்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலுள்ள உல்லாசப் பயண இடமான 'கசூர்ணு' கடற்கரையில் அதிகரித்து வரும் கடல் அரிப்பைத்தடுத்து அக்கடற்கரையை பாதுகாத்துக் கொள்ளுமுகமாக 13 ஆயிரம் ரூபா செலவில்மரநடுகைத் திட்டம் ஒன்றை வன இலாகா நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இக்கடற்கரைப் பகுதியில் 7000 சவுக்கு, சஞ்சீவி மரகன்றுகள் விரைவில் நாட்டப்படவுள்ளது.

தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு

'பொறுத்தது போதும்' நாடகம்:

## ஜனாதிபதி உதவியை யாழ். மாநகரசபை நாடுகிறது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தேசியநாடகப்போட்டியில் எக்காலத்தில் ஜனாதிபதியின் 4 முதற்பரிசுகளை பெற்றநாடகஅரங்க கல்லூரியின் 'பொறுத்தது போதும்' என்ற நாடகத்தை மதுரையில் ஜனவரி மாதம்நடக்கும்உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அனுப்பிவைக்க நிதியுதவியும், கடவைச்சீட்டும் கொடுத்துதவுமாறு ஜனாதிபதியையும் கலாச்சார அமைச்சரையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் யாழ். நகரசபையில் நிறைவேறியது.

யாழ். மாநகரசபைக் கூட்டம் முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தலைமையில் நற்று நடைபெற்றபோது திரு. ம. அலேசியஸ் மேற்கண்ட தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

நாடகக் குழுவுடன் கலைஞர் ஜோசப்பையும் அனுப்பவேண்டும் என்று ஜனப் முகைதீன் பிச்சை கொண்டுவந்த திருத்தப் பிரேரணையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனை உடன் நடைமுறைப் படுத்தும் வண்ணம் பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் கேட்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. (க)

## 'தகவம்' இலக்கியப்பணியும் இலக்கியப் பெருவிழாவும்

(கொழும்பு)

'தகவம்' என்ற தமிழ்க்கதைஞர் வட்டம் இன்று சனி கிழமையும் நாளை ஞாயிற்றுக கிழமையும் கொழும்பில் இலக்கியப்பெருவிழா எடுக்கிறது.

விவேகானந்த சபை சிறிய மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் நூல் வெளியீடு, நூல்விமர்சனம், நூல்அறிமுகம் வெள்ளிவிழாப்பத்திரிகாசிரியர்களுக்குப் பாராட்டு, பரிசு எழுத்தாளர் திரு. அருள் சுப்பிரமணியத்திற்குப் பாராட்டு, சிறுகதை எழுத்தாளருக்குப் பரிசளிப்பு மற்றும் பல நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

இவ் விழாவை யொட்டி 'தகவம்' வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

தகவம் வயதில் மிக இளையவளாக இருந்துவிட்டபோதும் கடந்த 27-10-78 20-12-80 காலப் பகுதியில் தனது ஆற்றலையே விஞ்சும் விதத்தில் செயற்பட்டுள்ளாள். அடக்கம் நிதானம் ஆகிய நற்பண்புகளால், தகவம் இலக்கிய அறிஞரின் நன்மதிப்பையும், அங்கீகாரத்தையும் பெற்றதோடு, ஈழநாட்டிலும், அதன் எல்லைகளுக்கு அப்பாலும் தனது கீர்த்தியை நிலைநாட்டியுள்ளாள்.

### சிறுகதை மதிப்பீடு

1975 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் சிறுகதை மதிப்பீடு தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. காலாண்டுக் கொருமுறை சிறந்த சிறுகதைகளைப் படைத்த மூன்று படைப்பாளிகள் தெரிவு செய்யப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுகின்றனர். முதல்வராகத் தெரிவு செய்யப்படுபவருக்குத் தகவ அன்பளிப்பாக ரூபா 25 00ம் வழங்குகின்றது பரிசளிப்பு வைபவங்கள் முடியுமானவரை பரிசாளரின் பிரதேசங்களிலேயே நடத்தப்படுகின்றன தகவம் ஐந்தாண்டை நிறைவு செய்தபோது, அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் பரிசுபெற்ற பரிசுக்கதைகளுள் அதிசிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதற்கு ரூபா 100 மேலதிக அன்பளிப்பும், சான்றிதழும் வழங்கியது அதி சிறந்த சிறுகதை எழுதி கௌரவிக்கப்பட்டவர் திரு. கே. ஆர். டேவிற் இப்பரிசளிப்பு வைபவத்தைத் தலைநகரில் சிறப்பாகக் கொண்டாட 'நிதியுதவி' வழங்கிய இலக்கிய ஆர்வலர் சி. வி. தம்பையாவை நன்றி உணர்வுடன் நினைவுகூர்கின்றோம். சிறுகதை மதிப்பீடு மேலும் ஆரோக்கியமான ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கு பயன்பெறும்விதத்தில் திருத்தி அமைக்கப்பட நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

### நாவல் மதிப்பீடு

தமிழ் நாவல் இலக்கியத்தையும் ஆண்டு அடிப்படையில் மதிப்பீடுசெய்து, சிறந்த ஆக்கங்களை அளித்த முதல்மூவருக்குப் பரிசும், சான்றிதழும் மூலம் கௌரவிக்கத் தகவம் முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு தொடக்கம் இம்மதிப்பீடு நடைபெறவுள்ளது. இம் மதிப்பீடு தொடர்பான விதிமுறைக் கோவை தயாராகின்றது. இப் பணிக்குப் பொறுப்பாக நண்பர் வித்தியாபூஷணம் நா சுப்பிரமணியம் அவர்களைத் தகவம் தெரிவு செய்துள்ளது.

### வட்டாரச் சிறுகதைப் போட்டிகள்

தமிழ்க் கல்வி வட்டாரம் தோறும் சிறுகதைப் போட்டிகள் நடைபெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்.

## ஒருவருட வைப்புத் திட்டங்கள்

| | |
|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% |
| முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருட வைப்புத் திட்டங்கள்

| | மாதாந்தம் செலுத்தப்படுவது | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது |
|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/- ற்கும் கீழ் | 22% | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | 27% |

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19
கிளைகள்: யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி 2466
அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்தை, தொலைபேசி 534
கண்டி 901/A பேராதனை வீதி, தொலைபேசி 4196
முகவர்கள் (ஏஜண்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சுத்தஞானமும் சுத்த பக்தியும் ஒன்றே யாகும். இரண்டும் சாதகர்களை ஒரே குறிக்குத்தான் அழைத்துச் செல்லுகின்றன. இரண்டினுள் பக்தி மார்க்கம் உளதே. அது மற்றதைவிட மிக எளிய தாகும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

## பாரசீகக்குடா, இந்துமாகடலில்

# அமெரிக்கத் துருப்புகள் 3 லட்சமாக அதிகரிப்பு!

லண்டன், டிச. 19

இந்துமாகடலிலும் பாரசீகக் குடாவிலும் அமெரிக்க ராணுவம் நிலையாக இருக்கும் திட்டத்தை அமெரிக்கா அங்கீகரித்துவிட்டது 5-வது கடற்படை இன்னமும் அதிகாரபூர்வமாக அமைக்கப்படாவிட்டாலும், ஈரான் நெருக்கடியின் ஆரம்ப முதல் இரு விமானம் தாங்கிக் கப்பல்கள் உள்ளிட்ட ஒரு பெரிய கப்பற்படை இந்தப் பகுதியில் நடமாடிக் கொண்டிருப்பதாக 'ஆப்பிரிக்கா' என்ற லண்டன் சஞ்சிகை தெரிவித்துள்ளது

அமெரிக்காவின் தலையீட்டுக் கொள்கை 1977-ம் ஆண்டிலேயே வகுக்கப்பட்டு விட்டதால் அமெரிக்கா தன் பலத்தைக் காட்டுவது, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் நிகழ்ச்சிகளின் விளைவாக இருக்க முடியாதென்றுகூறும் 'ஆப்பிரிக்கா' சஞ்சிகை; 'பாரசீகக் குடாவிலும், இந்துமாகடலிலும் முன்னர் 1,10,000 அமெரிக்கத் துருப்புக்கள்தான் இருந்தன; இப்போது துரிதமாகக் கொண்டு இறக்கப்படும் படைகளின் தொகை 3 லட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் இந்துப் படையின் தளவாடங்களுக்காக 10 பில்லியன் முதல் 20 பில்லியன டாலர்வரை செலவிட திட்டமிடப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளது

"டியாகோ கார்சியா தளத்தை நவீனப்படுத்துவதற்காக ஒரு பில்லியன் டாலர் செலவிட பெண்டகன் திட்டமிட்டுள்ளது. கென்யா, சோமாலியா, ஓமான் முதலிய நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய தளங்களை அபிவிருத்திசெய்ய அமெரிக்கா 20 கோடி டாலர் செலவிடவுள்ளது. கென்யா, அமெரிக்க தளங்களுக்கு இடம் கொடுத்திருப்பதற்குப் பிரதிபலனாக 3 கோடி டாலர் மதிப்புள்ள ஆயுதங்களையும் யுத்த தளவாடங்களையும் பெறும் 1981-ல் ஓமானுக்கு 5 கோடி டாலர்

(8-ம் பக்கம் பார்க்க)

## நமது நோக்கு

### பேராசிரியர் மயில்வாகனம்

பேராசிரியர் மயில்வாகனத்திற்கு கொழும்பு பல்கலைக்கழகம் DSc பட்டம் அளிப்பதுடன் பட்டமளிப்பு பேருரையையும் நிகழ்த்த அழைத்திருக்கின்றது

காலத்தால் தாமதித்த கௌரவம் இது என்றாலும், அது மிகப் பொருத்தமான இடத்தில் மிகப் பொருத்தமானஒருவருக்குவழங்கப்படுகின்றது. ஆனல்இவ்விடயத்தில குழந்தையான யாழ்ப்பாணம் கொழும்பைக் குட்டி முந்திவிட்டது.

சுமார் நாற்பது வருடங்களாகக் கொழும்பில் பௌதிக பேராசிரியராகப் புகழ்பெற்ற பேராசான் மயில்வாகனத்திடம் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் உள்ளத்தில் இந்த எண்ணமே உதயமாகும்.

சிந்தனைத் தெளிவும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறனும், அத்துடன் கண்டிப்பான நடையும் அசட்டைசெய்யும் இடைமாணவருக்குப் பெரும் இடராகவும் இருந்திருக்கும். ஆயினும் வாழையடி வாழையாக அவர் வளர்த்துவந்த மாணவர் பரம்பரை இன்று உலகின் பல்வேறு இடங்களில் விஞ்ஞான ஒளியைப் பரப்பிவருகின்றது

சத்திச்சொட்டு நிலையியக்கவியல், அண்டக் கதிர்கள், வளிமண்டல மின்னியல் போன்ற துறைகளில் ஆய்வு நடத்திய பேராசிரியர், இந்தியாவின் Dr. கிருஷ்ணன் FRS, போன்ற உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாகத் திகழக்கூடிய திறமை பெற்றிருந்தார். ஆயினும் திறமைக்கு முதலிடம் கொடாத சூழ்நிலை இந்நாட்டில் அவருடைய புகழ் ஓங்கிய காலத்திலேயே நிலவியிருந்தது. 1955ல் ஹிங்குருங்கொடயில் முழுச் சூரிய கிரகணத்தை அவதானித்த அனைத்துலக விஞ்ஞானிகள் குழுவை உருவாக்கியவரும் அக்குழுவிற்குத் தலைமைதாங்கியவரும் இவரே.

இந்த உச்சக்கட்டத்தில் சிறந்த விஞ்ஞானியாகவோ அல்லது பல்கலைக்கழக உபவேந்தராகவோ வரக்கூடிய தகைமையிருந்தும் அவ்வித உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டைகள் இருந்தது அவருக்கு மனவிரக்தி ஏற்படுத்திய காலமாகும்.

உளமுதிர்ச்சியடைந்த காலத்தில் தமிழையும் சைவத்தையும் நுணுகி ஆராயும் அவா இருந்ததால், விஞ்ஞானத்தில் இருந்த புலமை மெய்ஞ்ஞானத்தில் மலர்ச்சிபெற்றது.

மணிவாசகரின் திருவண்டப்பகுதியை, தமக்கிசைந்த பௌதிக ஆராய்ச்சியுடன் இணைத்து அவர் ஆற்றிய ஆழமான கருத்துரையைக் கேட்ட பண்டிதர்களும் புலவர்களும் திகைத்துப் போனது பேராசிரியருக்குத் தெரியாமலிருக்க முடியாது.

இவ்வித ஆத்மதரிசனத்தில் பிற்கால வாழ்வை நிறுத்த முடிந்ததால், பேராசிரியரின் ஓய்வுகாலம் எதிர்பாராத விதத்தில் நாட்டின் உயர்கல்விக்குப் பயனளிக்குமென்பது எமது நம்பிக்கை.

தாய்மொழியில் விஞ்ஞானக் கல்வி—உயர்கல்வி கூட பயிற்றமுடியுமென்றதுணிவு கொண்ட கூட்டத்தின் தலைமை பேராசிரியருக்கே உரித்தானது. அந்தப் பணி பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து வளரப் பல பிரச்சனைகள் உண்டு. அவற்றையெல்லாம் அவருடைய அயராத, உறுதிகொண்ட உள்ளத்துடன் அணுகித் தீர்க்கமான முடிவுகள் எடுப்பதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவில் அவர் இன்று வகிக்கும் இடம் அரிய சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

நாட்டின் பல்கலைக்கழகங்கள் ஒரு தேசிய நோக்கில் வளர்ச்சிபெற, அதேசமயம் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் தனித்துவ தேவைகளைப் பூர்த்திசெய்ய, கல்வியும் ஆராய்ச்சியும் சிறப்புற விளங்க இவைபோன்ற பாரிய பொறுப்புகளைக் கொண்டதே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

இக்குழுவின் அங்கத்துவத்திற்கு இன்றியமையாத ஆற்றல், அறிவு, அனுபவம் யாவுங்கொண்ட பேராசிரியர் பல்லாண்டுவாழவேண்டும், அவருடைய சேவை சிறக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

## "திருபுரம்" பெயர் சூட்டக் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பொன்னாலையில் நிறுவப்பட்டுள்ள வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதிக்கான வீடமைப்புத்திட்டத்திற்கு "திருபுரம்" என்று பெயர் சூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொன்னாலையிலுள்ள வீடமைப்புத் திட்டத்தில் வீ பெற்றவர்களின் சார்பில் யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றின் மூலம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்மகஜரின் பிரதிகள் சங்கானை உதவி அரசாங்க அதிபர், வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மக்கள் கருத்து

### வன்னிப் பிரதேசம் வளர்ச்சி பெற.....

அன்று தொட்டு இன்றுவரை வன்னிப் பிரதேச மக்கள் சரிவர உணர்ந்து ஆண்டவனாலேயே தங்களுக்களிக்கப்பட்ட அற்புத குணங்களான கருணை, தாய்மை, பொறுமை இவற்றின் மூலதனத்துடன் இவ் வன்னி மண்ணில் வாழ்ந்துவந்துள்ளனர். 'மாடு கட்டி சூடு அடித்தால் மாளாது செந்நெல் என்று, யானை கட்டிப் போரடித்த' பொற்காலம் அக்காலம். வன்னிவள நாட்டின் பொற்காலம் நீடிக்கவில்லை. பொருளாதார மையங்களைத் தாங்கியமை முதலான பல்வேறு காரணங்கள் வன்னியைக் கீழ் நிலைக்குக் கொண்டு வந்திருக்கலாம். அன்று வெளிநாடுகளில் உணவுப் பாத்திரங்களை நிரப்பிய வரலாற்றுக் காலங்களில் வன்னிப் பிரதேசம் நெற்களஞ்சியமாகத் திகழ்ந்திருக்கிறது என்பது பெருமைக்குரிய விடயமல்லவா?

அரக்கத்தனமான இதயங்களாலும், கண்மூடித்தனமான கோட்பாடுகளாலும் பகுத்தறிவுகள் மண்மூடிப்போயிருந்த போது வன்னி இளைஞர்களின் உரிமைகள் உயர்வுகள் மறைந்து மறுக்கப்பட்டன. ஆனல் இன்று வன்னிப் பிரதேசத்தின் கொாபரிதியில் இவர்களின் கல்வித்தரம் கூடியுள்ளது. அந்த அளவு நாம் முன்னேற்றம் அடைந்துள்ளபோதும் இன்னும் பின்தள்ளப்படுகிறோம். பட்டதாரி, எழுத்தாளர்கள், கவிஞர்கள் உருவாகிவரும் இவ்வேளை நிச்சயம் வன்னிப்பிரதேசம் மறுமலர்ச்சி அடைந்து புகழ் பரவ வாய்ப்பு ஏற்படுகிறது

மற்றைய சமூகத்தைப் போல் கல்வியால், நாகரீகத்தால், அரசியலால், பொருளாதாரத்தால் மேம்பட்ட ஒரு முழுமையான சமூகமாக வளரவேண்டுமே என்ற ஒரே நோக்கம் வன்னிவள மக்களிடை ஏற்பட்டுள்ளது. இருளின் பிடியிலிருந்து விடுவிக்கும் ஒரே பணியில் இளைஞர்கள் இதயபூர்வமாக ஈடுபடவேண்டும். உணவு, உடை, உறைவிடம், கல்வி, உழைப்பு, திருமணம், மழலைச் செல்வம் போன்றவற்றில் முழுமையாக ஒன்றைமட்டும் பெற்றுக்கொண்டால் அது நிறைவான வாழ்க்கை அல்ல.

ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வளர்ந்துவரும் யுகத்தில் வன்னிப்பிரதேசத்தினை பொறுத்தவரை கல்வியின் அவசியத்தை உணராமல் காலமெல்லாம் தாங்கள் நிலம் சொத்துவதையும், திருமணம் செய்வதையும் அடுக்கடுக்கான பிரஜைகளை உற்பத்தி செய்தலுமே தங்கள் கடமையெனச் சிந்தித்த நிலையில் வாழ்ந்தால் வன்னி மறுமலர்ச்சி பெறமுடியாது. இந்த நிலையினை மாற்ற தற்கால இளைஞர் சமுதாயத்தினை அரசியல், பொருளாதார, சமூக விடயங்களில் சிந்தனை ஏற்படவேண்டும்.

சுப்பு விவேகானந்தா
கந்தபுரம்,
வவுனியா.

[நல்லூர் சிவன் கோவிலில் நாளை ஞாயிறு இரவு திருவூஞ்சல் விசேஷ திருவிழா நடைபெறுகிறது. இவ்வுற்சவத்தில் இடம்பெறும் 'கப்பல் பாட்டு' இங்கு இடம்பெறுகிறது.]

## கப்பல் பாட்டு

ஏலேலோ தத்தையா ஏலேலோ

ஐந்து பூதப்பலகை கப்பலாய்க் கட்டி
அழகான வோங்காரப் பாய்மரம் நாட்டி
நெஞ்சு முதல் நாற்சரணக் கயிறுகளை மீட்டி
நேரான ஞானவழி மார்க்கமும் காட்டி
பஞ்சாக்ஷரச் சரக்கை பக்குவமாய்க் கட்டி
பக்தியொடு கப்பலிலே சக்தியோடு ஏற்றி
அஞ்சாது நாலு மறைப்பாய்களை இழுத்தே
அஞ்சு பொறிச் சுக்கானை அசையாது பிடித்தே
ஆனந்த அருள் வெள்ளக் கடல் தனிலே கப்பல்
மோனந்தனில் திளைத்துப் போகுதடா கப்பல்
ஞானநதனில் மிதந்து போகுதடா கப்பல்
பேரின்பக் கரை சேரப்போகுதடா கப்பல்
பஞ்சமா பாதகந் தள்ளடா தள்ளு
பக்திக் கடலிலே தள்ளடா தள்ளு
பஞ்சமாபாணங்களைத் தள்ளடா தள்ளு
பரவெளிக் கடலிலே தள்ளடா தள்ளு
மூவாசை யாவுந் தள்ளடா தள்ளு
முத்திக் கடலிலே தள்ளடா தள்ளு
ஆசாத யாவையுந் தள்ளடா தள்ளு
அண்ட பரவெளியிலே தள்ளடா தள்ளு
திருமந்திரம் சொல்லித் தள்ளடா தள்ளு
திருக்கருணைக் கடலிலே தள்ளடா தள்ளு
பரிபூரணத்திலே தள்ளடா தள்ளு
பரமாத்துவத்திலே தள்ளடா தள்ளு

ஏலேலோ தத்தையா ஏலேலோ
ஏலேலோ தத்தையா ஏலேலோ.

— ந. வீரமணி ஐயர்


# பட்டப்படிப்புகள் கல்லூரி

## யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு.

புதிய (வெளிவாரி) மாணவர்களை அனுமதித்தல்—1981/82

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் கலைமாணி(B.A) வர்த்தக மாணி (B Com), சட்டமாணி (LL B), புள்ளி விபரவியல் (B Sc) ஆகிய வெளிநிலைப் (External) பாடநெறிகளுக்கான தமிழ்மொழிமூல விரிவுரைகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிக்கும்பொருட்டு பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

(1) க. பொ. த. உயர் பரீட்சையில் ஒரே அமர்வில் 4 பாடங்களில் சித்தி, அல்லது

(2) ஒரே அமர்வில் 3 பாடங்களிலும் இன்னொரு அமர்வில் ஒரு பாடமுமாக (இரு அமர்வுகளில்) 4 பாடங்களில் சித்தி, அல்லது

(3) தூய கணிதம், பிரயோக கணிதம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி, அல்லது

(4) 21 வயதிற்கு மேற்பட்டவர்களாயின் 3 பாடங்களில் சித்தி, அல்லது

(5) ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது கணித சிறப்பு பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் அல்லது வர்த்தக சிறப்பு பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் யாவும் தமிழ் மொழிமூலம் சனி, ஞாயிறு நாட்களில் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் யாழ்ப்பாணத்தில் பயில விரும்பும் மாணவர்கள், "அதிபர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 173/9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும், மட்டக்களப்பில் பயில விரும்பும் மாணவர்கள், "அதிபர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 37 பிரதான வீதி, மட்டக்களப்பு" என்ற முகவரிக்கும் 9" X 4" அளவுடைய சுய முகவரியிடப்பட்ட 35 சத முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை அனுப்பி, இலவச விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் பெறலாம். இக்கல்லூரியிலிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே மாணவர்கள் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 1981-ம் ஆண்டு தை மாதம் 10-ம் திகதியாகும்.

THE COLLEGE OF DEGREE STUDIES

அதிபர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
15, சென் லோறன்ஸ் வீதி,
கொழும்பு-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிமாவட்டங்களில் 6 வருடம்;

கஷ்டப்பிரதேசங்களில் 5 வருடம் சேவையாற்றிய

# தமிழ் ஆசிரியர்களுக்கு பெப்ரவரி முதல் சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் ஆறுவருடங்களும், நுவரெலியா, பண்டாரவளை போன்ற கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து வருடங்களுக்குச் சேவையாற்றிய தமிழ் ஆசிரியர்கள் எதிர்வரும் பெப்ரவரி 1-ம் திகதி முதல் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெறவுள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கத் தூதுக்குழுவொன்று கல்விச் சேவைக்குழுவின் செயலாளர் திரு எம் எச். ஆரியவர்த்தனவைச் சந்தித்து தமிழ் ஆசிரியர்களின் 'இடமாற்றம் பற்றியும்', மற்றும் பல்வேறுபட்ட பிரச்னைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடாத்திய போது கல்விச்சேவைக் குழுவின் செயலாளர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவின் சார்பில் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா, பொதுச்செயலாளர், திரு. த. மகாசிவம் ஆகியோர் கல்விச் சேவைக்குழுவின் செயலாளரைச் சந்தித்து தமிழ் ஆசிரியர்களின் பிரச்னைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். தூதுக்குழு நடாத்திய பேச்சுவார்த்தைகளின்போது பின்வரும் கோரிக்கைகள் கல்விச்சேவை ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1981-ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதிவரை வெளிமாவட்டங்களில் ஆறுவருடங்களும், நுவரெலியா, பண்டாரவளை ஆகிய கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து வருடங்களும் கடமையாற்றிய தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் பெப்ரவரி 1-ந் திகதியிலிருந்து அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றஞ் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

"நுவரெலியா, பண்டாரவளை ஆகிய கஷ்டப்பிரதேசங்களில் நான்கு வருடங்கள் சேவையாற்றிய தமிழ் ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்தால் அவர்களுக்கும் இடமாற்றம் வழங்க ஆவன செய்யப்படும்".

## பொய்யான வைத்தியச்சான்றிதழ்

நுவரெலியா, பண்டாரவளை போன்ற காலநிலை மிகவும் மோசமான மாவட்டங்களில் இருந்து கடந்த வருடம் அரச வைத்திய நிபுணர்களின் வைத்தியச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தும் இடமாற்றம் கிடைக்காததால் 'ஆஸ்மா' நோய்காரணமாக நான்கு ஆசிரியர்கள் இறந்துவிட்டார்கள் என்பதைச் சங்கம் சுட்டிக்காட்டி இக்கடும்குளிர்ப் பிரதேசங்களில்இருந்து 'ஆஸ்மா' நோய்போன்ற காரணங்களுக்கான அரசாங்க வைத்தியச் சான்றிதழ் வழங்கியவர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று இ. த. ஆ. ச. தூதுக்குழு வற்புறுத்தியமைக்குப் பதிலளித்த ஆணைக்குழுவின் செயலாளர், ஏராளமான ஆசிரியர்கள் பொய்யான வைத்தியச் சான்றிதழ்கள் சமர்ப்பிப்பதனாலேயே, இப்பிரச்னையில் சிக்கல் இருக்கிறதென்றும், உண்மையாகவே நோயால் பிடிக்கப்பட்டவர்கள் என்பது எவ்விதச் சந்தேகமுமில்லாதவகையில் நிரூபிக்கப்படும் இடத்து அவ்வாசிரியர்களுக்கு புத்தளம், சிலாபம், வவனியா, மன்னார் போன்ற கஷ்டப் பிரதேசங்களுக்குக் கல்விசேவைக்குழு இடமாற்றம் வழங்குமெனவும்தெரிவித்தார்.

தோட்டப் பாடசாலைச் சேவையில் நான்கு வருட சேவையை ஒருவருட வெளிமாவட்ட சேவைக்குச் சமமாக முன்னர் கணிக்கப்பட்டுவந்த சலுகையைக் கல்விச்சேவைக் குழு ரத்துச் செய்துவிட்டதைச் சுட்டிக்காட்டியபோது; அச்சலுகையை மீண்டும் வழங்குவதற்கு தான் கல்விச்சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

## மற்றுமொரு கோரிக்கை

வெளிமாவட்டங்களில் 6 வருட சேவையை முடித்த ஆசிரியர்களைச் சொந்த இடங்களுக்கு இடமாற்றுவதன்மூலம் ஏற்படும் வெற்றிடங்களைக் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் தொடர்ச்சியாகச் சேவைசெய்யும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதன்மூலம் நிரப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக க. சே. ஆ. குழுச் செயலாளர் தெரிவித்தபொழுது இம்மாவட்டங்களிலிருந்து வெளிமாவட்டங்களில் 5 வருடத்திற்கு மேலான சேவையை முடித்த ஆசிரியர்களை இடமாற்றம் செய்யக்கூடாது என்று இ. த. ஆ. சங்கத் தூதுக்குழுவினர் விடுத்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்டங்களில் மேலதிக ஆசிரியர்கள் இருக்கிறார்களென க. சே. ஆ. குழுவின் செயலாளர் புள்ளிவிபரத்தைக்காட்டி, மேலதிக ஆசிரியர்கள் அனைவரையும் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப் போவதாகத் தெரிவித்ததை இ. த. ஆ. ச. தூதுக்குழு வன்மையாக எதிர்த்து இம்மாவட்டங்களிலும் ஆசிரியா பற்றாக்குறை மோசமாக இருப்பதென கல்வி அமைச்சே பாராளுமன்றத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறதெனவும், கல்விச் சேவைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வமான புள்ளிவிபரத்தில் பல தவறுகள் இருக்கின்றதெனவும், அப்புள்ளி விபரங்கள் சரியானவையா அல்லது பிழையானவையா என்பதை மீளப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

இல. ஈடு 906

(1) அப்பையா சோமசுந்தரம்
(2) பெண் இராசம்மா இருவரும் - வழக்காளிகள்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

எதிராக

(1) மார்க்கண்டு நாகையா
(2) பெண் மனோன்மணி இருவரும் - எதிராளிகள்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில் ஈடு 906ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1980 ஆண்டு மார்கழி 31ம் திகதி புதன்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 6320/- இதில் ரூபா 4000/- 26-5-78 தொடக்கம் 27-11-78 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 686/- இதிலிருந்து செலவு ரூபா 500/- கழிக்கப்படவேண்டும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவில்இறை.

"தஞ்சிங்கடியும் நாவலடியும் தேவரந்தோட்டமும் நி. பர. 3 தென்னையும் கிணறும் இந்தப் பரப்பு மூன்றுக்கும் எல்லை கிழக்கு சின்னையா மார்க்கண்டுவும் பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனம் வடக்கு வாய்க்காலும் வயித்திலிங்கம் சரவணமுத்துவினுதனமும் மேற்கு சோமசுந்தரம் பெண் சிவயோகத்தினுதனம் தெற்கு சங்கரபிள்ளை பெண் அன்னம் பிள்ளையினுதனமும் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக்காணிக்குரிய பங்கும் தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாக இதடங்கலும் கிழசகெல்லைக் காணியில் தெற்கு எல்லையோரமாக இக் காணிக்குப் போக்குவரவுசெய்யும் பாதைப்பாவிப்புரித்தும்.

2வது மேற்படி இணுவில் கயங்கப்பதிநாயனெல்லை" நில ப. 1 வடலிகளும் இந்தப் பரப்பு ஒன்றுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கார்த்திகேசு செல்லையாவினுதனம், மேற்கு நாகையா பெண் மனோன்மணியினுதனம், தெற்கு ஒழுங்கை, இதனடங்கலும்!

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனர் and விலைமதிப்பாளர்.

இல. 24, முதலாம் குறுக்குத் தெரு,
29-10-80. யாழ்ப்பாணம். 7669

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. சண்முகம் இராசையாவும் பெண்
2. சவுந்தராம்பிகையும் இருவரும் சுருங்காவி காரைதிவு மேற்கு. தற்சமயம் சத்துரந்தை களபூமி, காரைநகர். -வழக்காளிகள்.

எதிராக

வழ. இல: ஈடு/399

விஞசித்தம்பி வைத்திலிங்கம், 47ம் இலக்கம் நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்,
- எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/399ம் இலக்க வழக்கால் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1981ம் ஆண்டு ஜனவரி மாதம் 02ம் திகதி 02-01-1981) வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 22,057/-ம் 26-1-1977 தொடக்கம் 28-7-1977வரைக்கும் ரூபா 17,000/க்கும் 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 618/75 செலவுத்தொகை 532/-ம் கழித்து

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று, காரைதீவு கிழக்கு இறை:- சத்துரந்தை நில. பர 8 1/2 எட்டரையும் பனைகள், வீடுகள், கிணறும் எல்லை கிழக்கு கந்தையா கணபதிப்பிள்ளைக்கும் முருகேசு தியாகராசாவுக்குமுரிய வாதனங்கள் வடக்கு முருகேசு தியாகராசாவின் ஆதனம் மேற்கு தியாகராசா பெண் நீலாம்பிகைக்கும் பங்காளருக்கும் ஆறுமுகம் கனகசபைக்குமுரிய வாதனங்கள் தெற்கு ஒழுங்கை இதடங்கலிற் சொரியலாய் 17/20 இருபதில் பதினேழு பங்குமதற்குரியனவகளும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
01-12-1980. 7688


மயிர்க்கொட்டி உங்கள் பயிர்களைத்தாக்குமுன் அதனைத் தாக்குங்கள்




லன்னேற்-எல் உபயோகியுங்கள்

காய்கறி வகைகள், மிளகாய்ச்செடி, வெங்காயம், புகையிலை முதலிய பெறுமதியான உங்கள் பயிர்களை மயிர்க் கொட்டி தின்று அழிக்கு முன்னர் அதனையே கொன்று அழியுங்கள்.

லன்னேற் எல் கூட்டுறவுக்கடைகள், லங்கெம் விவசாய சேவை நிலையங்கள் ஆகியவற்றிற் கிடைக்கும்.

ஐ. எஸ் ஏ. டெலவெயார், வில்மிங்டன், ஈ. ஐ. டு பொன்ட் டீ நெமர்ஸ் அன்ட கம்பனி (இன்கோர்பரேட்டட்) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட ® வர்த்தக அடையாளம்

450 மி. லீட்டர் ரூ 64-70



## விற்பனைக்கு

80 ஸ்ரீ 7076 யமாஹா 100cc மோட்டார் சைக்கிள்
(1979-ம் ஆண்டு மொடல்)

2 ஸ்ரீ 3504 போட் கொன்சல் கார்
(1958-ம் ஆண்டு மொடல்)

இதற்கான கேள்விப்பத்திரங்கள் 2-1-1981-ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

சட்ட ஆலோசகர்

TFC

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249/c, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7680


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கனகரத்தினத்திற்கு யாழ். ஐ. வி. சங்கம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

"அமரர் டாக்டர் கனகரத்தினம் பதினெட்டு வருடங்கள் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க இயக்குநர் சபையின் ஓர் அங்கத்தவராக இருந்துவந்தார். இதில் பதினறு வருடங்கள் தலைவராகக் கடமைபுரிந்தார். யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்துடன் அவர் தொடர்புகொண்டிருந்த முழுக்காலப்பகுதியிலும் கம்பனியின் முன்னேற்றத்திற்காக மனதார உழைத்து வந்தார்."

இவ்வாறு யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் மறைந்த பெரியார் டாக்டர் க. கனகரத்தினத்தின் பிரிவையொட்டி நடத்திய இரங்கற் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசிய சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. வி. மா. குமாரசாமி குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

"கடைசிச் சில வருடங்களில் இருதய நோயினல் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் கம்பனியின் நடவடிக்கைகளில் அவர் தொடர்ந்தும் முழு அக்கறை எடுத்துவந்தார்.

இங்கு நீண்டகாலம் இருந்த எம்மைப் போன்றவர்களுக்கு அவர் இயக்குநர் சபைக் கூட்டங்களுக்கு இங்கு வர இயலாதிருந்தபோது கூட்டங்களுக்கு கந்தர்மடம் மணற்தறை ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்திற்கு நாம் சென்றது நினைவிருக்கிறது. இச்சமயங்களில் உருசிகரமான தேநீர் தந்து எம்மை உபசரித்த திருமதி கனகரத்தினத்திற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

'31-12-80 வெள்ளிக்கிழமை தான் அவர் இயக்குநர் சபைக் கூட்டத்திற் கடைசியாகக் கலந்துகொண்ட நாள். 'ஆயிலிய பூசை'யிற் கலந்து கொள்ள கொழும்புத் துறையில் உள்ள யோக சுவாமி ஆச்சிரமத்திற்குச் செல்லும் நோக்கத்துடன் அவர் அன்று மாலை கூட்டத்திலிருந்து புறப்பட்டார். அவரது மனைவியும் அவரும் பூசையில் கலந்து கொண்டனர். பின்பு அவர்கள் ஒரு மருமகனைச் சந்திப்பதற்காக மூன்றும்குறுக்குத் தெருவிற்குச் சென்றனர். குழந்தைகளுடன் குதூகலமாக சொற்ப நேரத்தைக் கழித்த பின்னர் வண்ணார்பண்ணையிலுள்ள சிவதொண்டன் நிலையத்திற்குச் சென்று அங்கு வழிபட்டனர். அவர்கள் இருவரும் யோக சுவாமிகளின் விசுவாசமான அடியார்கள். அதன் பின்பு ஒரு மருமகனைச் சந்திப்பதற்காக அவர்கள் கொக்குவிலுக்குச் சென்றனர். கொக்குவிலில் இருந்து திரும்பும் போதே அவர் மாரடைப்பினுல் தனது 82 வது வயதிற் காலமானர்.

அவரது மரணச்சடங்கின் போது பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொண்டது யாழ்ப்பாண மக்கள் அவ மீது வைத்திருந்த உயர் மதிப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

டாக்டர் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரது சிந்தையில் 'இரண்டு விடயங்கள் மேலோங்கி நின்றது. ஒன்று யாழ்ப்பாணம் புற்று நோய்ச் சங்கம் மற்றது யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் இரண்டிற்குமாக அவர் அரும்பாடுபட்டார்."

கூட்டத்தில் இரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

# 'அவசரகாலம் - 79' நூல் ஒரு விழிப்பை ஏற்படுத்தும்' – யாழ். மேயர்

(யாழ்ப்பாணம்)

"1979-ம் ஆண்டு ஜூலை மாதம் யாழ். மாவட்டத்தில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலையின்போது காணுமல் போன—கடுமையாக இம்சிக்கப்பட்டுச் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்ட-கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு நேர்ந்த கதியை விமர்சிப்பதே "1979 அவசரகாலம்" என்ற நூல்.

இவ்வாறு யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

'1979 அவசரகாலம்' என்ற நூல்வெளியீட்டுவிழாவையொட்டி திரு. விசுவநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"1979-ம் ஆண்டு அவசரகாலச்சட்டத்தின்போது யாழ். மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எமது மனச்சாட்சியை உறுத்தவேண்டியவை. இவை குறித்து இத்தீவின் மக்களும், வெளிநாட்டவர்களும் அறிந்து பயனடையும் வகையில் சம்பந்தப்பட்ட தேர்வுகளை நூலுருவில் பதிவுக்குக் கொண்டுவந்தமைக்காக, இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தையும், சிறப்பாக அதன் ஸ்தாபக தலைவரான வண. கஸ்பேக் அடிகளாரையும் நன்றியறிதலுடன் பாராட்டுவதற்குத் தமிழ மக்கள் கடமைப்பட்டுள்ளனா.

"1977 ஆகஸ்ட் - செப்டெம்பர் வன்செயல் சம்பவங்களை விசாரிப்பதற்காக அரசினல் நியமிக்கப்பட்ட சன்சோனிக் கமிஷன் அறிக்கையையும் முந்திக்கொண்டு, தனியார் ஸ்தாபனமான இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் இரண்டு ஆண்டுகள் கழித்து நடைபெற்ற தேர்வுகள் பற்றிய ஓர் அறிக்கையை நூலுருவில் வெளியிட்டிருப்பதே பெரும்சாதனை தான்.

இத்தீவின் எப்பகுதியிலும் மனித உரிமைகள் மீறுதல்கள் எக்காலத்திலும் யாரெவருக்கும் நிகழாதிருக்க "1979 அவசரகாலம்" நூல் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துமென நம்புகிறோம்.

(மகா-கு)

# வீட்டுக் கூரைபிரித்து ரூ. 10,000 கொள்ளை!

(யாழ்ப்பாணம்

வீட்டின் கூரையைப்பிரித்து உட்புகுந்த கொள்ளைக் கோஷ்டி வீட்டிலிருந்த சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளையும் ரொக்கப்பணத்தையும் தோட்டாக்களையும் கொள்ளையடித்துச் சென்றது

இக்கொள்ளைச் சம்பவம் செட்டிகுளத்தில் நடைபெற்றது.

இக்கொள்ளை சம்பந்தமாக மேற்படி வீட்டின் சொந்தக்காரரான வேலுப்பிள்ளை இரத்தினம் (22 வயது) என்பவர் வவனியா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

"இம்மாதம் 14-ம் திகதி இரவு செட்டிகுளத்திலுள்ள எனது வீட்டிலிருந்து எனது வயலுக்குக் காவலுக்காகச் சென்று விட்டேன். வீட்டில் எனது மனைவிமட்டும் தனியாக இருந்தார். காவலுக்குப் போகுமுன் பணம், நகை ஆகியவற்றை பனை ஓலைப் பெட்டி ஒன்றிற்குள் வைத்து மூடி விட்டுச் சென்றேன். மறுநாள் காலை வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பிவந்து பார்த்தபோது ஓலைப்பெட்டி திறந்த நிலையில் கிடந்தது. எனது மனைவியிடம் விசாரித்துப் பார்த்தேன். அவருக்கு அதுபற்றி தெரியவில்லை. பின் வீட்டில் தேடுதல் நடத்தினேன். வீட்டில் வைக்கப்பட்டிருந்த 4-ம், 12-ம் இலக்க தோட்டாக்கள் பன்னிரண்டையும் காணவில்லை. அத்துடன் ஓலைப்பெட்டிக்குள் வைத்திருந்த ரொக்கபணத்தையும் நகைகளையும் காணவில்லை. பின் வீட்டின் கூரை பிரிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. நான் வீட்டில் இல்லாததை அறிந்தவர்கள் தான் இத்திருட்டைச் செய்திருக்க வேண்டும்" என்று தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (...)

# காலராவுக்கு நால்வர் பலி!

## வயிற்ருேட்டம் காரணமாக 146பேர் அனுமதி

(மன்னர்)

சிலாவத்துறையில் ஆரம்பமான காலரா நோய் மன்னர் மாவட்டம் முழுவதும் பரவும் அபாயம் ஏற்பட்டு வருகிறது.

மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலையில், காலரா வாட் என்று ஒரு தனி வாட் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு இதுவரை 146பேர் வயிற்ருேட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 25 பேருக்கு காலரா நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேசாலையில் முதலில் ஒரு பெண்ணுக்கு, காலரா நோய் ஏற்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது மேலும் ஒரு பெண்ணுக்கு காலரா நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பேசாலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவ்விரு பெண்களும் மன்னர் அரசினர் ஆஸ்பத்திரியில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் நால்வர் வயிற்ருேட்டம் காரணமாக பேசாலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் இருவர் சுகமடைந்து சென்றுள்ளனர் இருவர் இப்போதும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தலைமன்னர் பகுதியிலும் ஒருவர் காலரா நோயினல் பீடிக்கப்பட்டுள்ளார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மன்னர் மாவட்டம் முழுவதும் சுகாதாரம் பேணப்பட்டு வருகிறது. கடைகளில் குடிநீர் கொதித்து ஆறிய பின்னரே வழங்கப்பட்டு வருகிறது. சுகாதாரப் பகுதியினர் தீவிர தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து சுகாதாரக் கல்விப் பிரசாரக் குழு மன்னருக்கு வந்துள்ளது. இவர்கள் மன்னர் மாவட்டம் முழுவதும் நோய்த் தடுப்பு முறைகள் பற்றி பிரசாரம் செய்து வருகின்றனர். குறிப்பாக கரையோரப் பகுதிகளிலேயே பிரசாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சிலாவத்துறையில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது காலரா நோய் தொடர்ந்தும் பரவி வருமானல் மன்னர் மாவட்ட கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டி வரும் என்று சுகாதாரப் பகுதியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். இதுவரை காலரா நோய்க்கு மன்னர் பகுதியில் 4 பேர் பலியாகியுள்ளனர்

பேசாலையில் பொது சுகாதார அதிகாரி காலரா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். பேசாலையில் உள்ள் ஹோட்டல்களில் உணவு வகைகள் சுகாதார முறைப்படி பாதுகாக்கப்பட வேண்டுமென்று பேசாலை கிராம சேவை அலுவலர் திரு. ஜே. சந்திரா மிராண்டா அறிவுறுத்தி வருகிறார்.

# நவீன சந்தை

(உடுப்பிட்டி)

நெல்லியடியில் சுமார் எட்டு லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுவரும் நவீன சந்தை மாடிக்கட்டிடம் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது.

நெல்லியடிப் பட்டினசபையினல் உருவாக்கப்பட்டுவரும் இந்நவீனசந்தையில் 24 கடைகள் அமைந்துள்ளன. பிரஸ்தாபசந்தை அடுத்தமாத இறுதியில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினல் திறந்து வைக்கப்படவுள்ளது.





தமரேன்

அனைத்தையும் அழிப்பது

தமரேன் 60% எல். ஸீ. தனிச் சிறப்புள்ள கிருமிநாசினி.

பாவியுங்கள் BAYER தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்

50, பொஸ்டர் ஒழுங்கை

கொழும்பு 10.

தொலைபேசி: 93563

melADS

50 மி. லீட்டர் ரூபா 13-00

200 மி. லீட்டர் ரூபா 42-50

100 மி. லீட்டர் ரூபா 23-00

450 மி. லீட்டர் ரூபா 87-50

4.5 லீட்டர் ரூபா 825-00


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

LAST FEW DAYS ONLY

**SANTHI** (JAFFNA) DAILY 4 SHOWS
10-30, 2-30, 6-30, 9-30

★ LEE MARVIN. ★ CHARLES BRONSON
★ JIM BROWN

**"THE DIRTY DOZEN"**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
**தேவதாஸ்**

**வின்ஸர்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, இரவு 9-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா-ஆனந்தன்
**தனிப்பிறவி** (புதிய பிரதி)

**நாகம்ஸ்** (கல்லுகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
**ஞானக்குழந்தை**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி-சாரதா
**ஞானஒளி**

**ராஜா** (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30

இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'

என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.

ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்

**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
எம். ஜி. ஆர்.- சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**நினைத்தாலே இனிக்கும்**

வெற்றிகரமான **2-வது** வாரம்!

**ராணி** யாழ்ப்பாணம் தினசரி 10-30, 2-30, 6-00, 9-3

அழகான ஒரு மலரை வண்டு நாடியது--அம்மலரோ ஆண்டவன் சந்நிதியில் மாலையாகியது!



செவன் ஆர்ட்ஸ் வழங்கும் **ஒருதலைகாதல்**

**மகத்தான சாதனை!**
**கடந்தவார வசூல் ரூ. 100000/-**

இன்றே குடும்பத்தோடு பார்த்து மகிழுங்கள்!

இன்று காலை 9-00 மணிக்கு திரையிலிருந்து நிகழ்ச்சியில் "ஒருதலை காதல்" விசேட நிகழ்ச்சியை கேட்கத் தவறாதீர்கள்!


# இன்றைய பலன்

மார்கழி மாதம் 5ம் திகதி
சனிக்கிழமை
(20-12-80)

மேடம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடிப்பில் மாட்டிக்கொள்ள நேரிடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும். பொறுமையைப் பேணி நடக்கவும்.

இடபம்: இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம். வணிகத் துறையில் சம வருவாய்க்கு இடமுண்டு. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிகாட்டும்.

மிதுனம்: இதயப்படுதாவில் இன்பக்கூத்து. கற்றதனால் பயன் இன்று கிடைக்கும். நுட்பமான வேலைகளில் இன்று ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

கடகம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள். நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பார்கள். பொறுமையைப் பேணவும்.

சிங்கம்; வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக்கிடைக்கும். கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். அறிஞர்களின் ஆதரவும் உண்டு. சுப தினம்.

கன்னி: வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். சுப நாள்.

துலாம்: ஆயுத பீடைக்கு இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும். அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும். தெய்வநம்பிக்கை நன்று.

விருட்சிகம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். காதலர் வாழ்வில் கனகுஷியானதினம். வாழ்க்கையில் உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

தனு: பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவு விடயத்தில் பிரியக் குறைவு ஏற்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும்.

மகரம்: புண்ணிய காரியங்களில் விருப்பு ஏற்படும். பிதா வழி தனவரவுக்கும் இடம் உண்டு. கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக்கிடைக்கும்.

கும்பம்: முயற்சியால் உயர்ச்சி உண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. தொழிலிலும் நன் மாற்றங்கள் உண்டு.

மீனம்: சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கு இடம் உண்டு. பெரியோர்கள் ஆதரவும் பெருகும். மகிழ்ச்சிகரமான தினம்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல8 அ-பிரிவுகள் 524, 532)
யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோப்பாய் தெற்கு சரவணமுத்து இரத்தினம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் சண்டிலிப்பாய் சரவணமுத்து நாகராசா,
மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3293

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தைஎண்பிப்பதற்காக/நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப் பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை. ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1980 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

7676

## நாளை நடைபெறும் கூட்டணிக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய கிளையின் ஆதரவில் அபிவிருத்தி சபைகள் பற்றிய பொதுக்கூட்டமொன்று நாளை மாலை செல்லமுத்து விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளையின் தலைவர் சி. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் எதிர்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மாவை சேனாதிராசா திரு. ஆசீர்வாதம் ஹென்றி உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள்,


**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 9 30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராணி** - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
**ஒரு தலை காதல்**
(குடும்பப் பெண்ணின் கதை)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வெற்றிகரமான 2-வது மாதம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறளும் விவிலியமும்

ஆசிரியர் ம. பாலிலுப்பிள்ளை அடிகள்
ஆராய்ச்சி முகவுரை
தத்துவக் கருத்துரை,
விவிலிய ஒப்புமை
ஒருங்குதரும் புதிய படைப்பு
தமிழ் மாணவர் யாவரும்
விரும்பிப் படிக்கவேண்டிய நூல்
முதற் பகுதி விலை :
ரூபா 5-00
பிரபல புத்தகசாலைகளில்
விற்பனையாகிறது 7613



# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்


## ஈரானில் பூகம்பம் 24 பேர் பலி

தெஹ்ரான் டிச 19 மேற்கே 200 கி. மீற்றர் ஈரானில் இன்று இடம் தொலைவில் இடம்பெற்ற இப் பெற்ற பூமி அதிர்ச்சியில் 24 பூமியதிர்ச்சியில் இன்னும் பலர் பேர் பரியானுர்கள் என்று பலியாகியிருக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அச்சம் தெரிவிக்கப்பட்டுள் தொஷ்ரானுக்கு தென் ளது. (கு)

## தகவத்தின் இலக்கிய விழா

(கொழும்பு)

தமிழ்க் கலைஞர் வட்டம் (தகவம்) எடுக்கும் இலக்கியப் பெருவிழா இன்றும் நாளையும் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

திரு. ஏ. பி. வி. கோமஸ் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சியை பேராசிரியர் ஆ சதாசிவம் மங்கள விளக்கேற்றி ஆசி வழங்கித் தொடக்கிவைப்பார். இன்றைய நிகழ்ச்சியின் போது த. சண்முகசுந்தரத்தின் 'மாருதப் புரவல்லி சப்பற்பாட்டு' நூல் வெளியீடும், புலவர் பார்வதி நாதசிவத்தின் 'இருவேறு உலகம்' நூல் ஆய்வும் இடம் பெறும். (கு)

## எம். பி.க்கள் அலவன்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எவருக்கும் தெரியாது. படி கிடைக்குமென்று எல்லோரும் இங்கு வரவில்லை. கடந்த காலத்தில் சொந்தப் பணத்தைச் செலவிட்டே மக்கள் சேவை செய்துள்ளனர். ஆதலால், வரிப்பணத்திலிருந்து படியை எடுக்கக்கூடாது' வரியிலிருந்து பணத்தை எடுத்தால் அது கைலஞ்சம் போல அமைந்துவிடும் மக்கள் பணத்தில் கைவைக்கக் கூடாது.''

### தவறு இல்லை

உப-முதல்வர் சேவியர்: ''கடந்த காலத்தில் உறுப்பினர்கள் தவறான வழியில் நடந்தார்கள் என்பதை நான் மறுக்கிறேன். யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் பலவிதமாக நடந்திருப்பதாகக்கூறப்பட்டாலும், அவை நிரூபிக்கப்படவில்லை. வரியிலிருந்து நாம் படி எடுப்பது கைலஞ்சமாகும் என்பதை ஏற்கவில்லை. பாராளுமன்ற எம். பிக்கள் அலவன்ஸ் பெறுகிறுர்கள் அவர்களுக்கு கார், ஜீப், வீட்டு வசதிகள் கிடைக்கிறது. அமைச்சர்களுக்கும் மக்கள் பணத்திலிருந்து சகல வசதிகளும் கிடைக்கிறது அப்படியாளுல் வரிப்பணத்திலிருந்து நாங்கள் அலவன்ஸ் எடுப்பதில் என்ன தவறு? அலவன்ஸ் பெறும் எம். பிக்களை மக்கள் குறைசொல்லவில்லையே எம். பிக்கள் அலவன்ஸைக் கைவிடவில்லையே. இந்தத் தீர்மானத்தை சபை ஏற்காத பட்சத்தில் வரிப் பணத்தில் இருந்து உறுப்பினர்கள் விரும்பினால் அலவன்ஸ் எடுக்கலாம் அல்லது விடலாம். அது உறுப்பினர்களைப் பொறுத்தது.''

### 30 வருடம் சேவையாற்றுகிறேன்

திரு. ஏ. துரைராஜசிங்கம்: சபையில் வசதியில்லாதவர்களும் இருக்கிறுர்கள். வசதி உள்ளவர்கள், வரிப்பணத்தில் இருந்து அலவன்ஸை எடுக்காமல் விடலாம். நான் 30 வருடம் மக்கள் சேவை செய்கிறேன். நான் எந்தவித சம்பளமும் எடுக்கவில்லை. மேயர் துரையப்பா நவீன மார்க்கட் கடைகளைக் கட்டி உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளித்தார். லஞ்சம் கொடுப்பது ரகசியமாகும். அது கொடுத்தவருக்கும் வாங்கியவருக்கும் மட்டுமே தெரியும். மாலைகளாக, பொருட்களாக, போத்தலாக இவர்கள் லஞ்சம் பெறுகிறுர்கள். இதனை ஒழிப்பதற்குப் படிவழங்கவேண்டும். அரசு இனிக் கொடுக்கமாட்டாது. சபைதான் கொடுக்கவேண்டும். நான் இத்தீர்மானத்திற்கு மாறில்லை. அரசிடம் கேட்டுப் பார்ப்போம். அரசு தராவிட்டால் சபைநிதியிலிருந்து விரும்பினவர்கள் எடுக்கலாம்'.

திரு. அலோசியஸ்; மக்களுக்குத் திறமையான சேவை செய்ய உறுப்பினர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும். அதற்கு இந்தப்படி உதவிசெய்யும். எம், பிக்களுக்கு இலவச டெலிபோன் வசதிகள் கொடுத்துள்ளார்கள். தாங்கள் 23 வட்டாரங்களின் வேலைகளைக் கவனிக்க இலவச டெலிபோன் வசதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டும். எங்கள்வட்டாரங்களைப் போய்ப் பார்ப்பதற்கு ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும், அல்லது ஜீப் வழங்க வேண்டும். இந்தப் படியை அரசிடம் கேட்போம்''.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப் பட்டது. (க)

## தமிழ்...

(5- பக்கத் தொடர்ச்சி)

யாழ். கொழும்பு மாவட்டங்களுக்கு வெளிமாவட்டங்களிலிருந்து இடமாற்றம் பெறும் சம எண்ணிக்கையான ஆசிரியர்களையே இம் மாவட்டங்களிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் கல்விச் சேவைக்குழுவின் செயலாளர் ஏற்றுக்கொண்டார்.

யாழ் கொழும்பு மாவட்டங்களில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள 5 வருட மொத்த வெளிமாவட்ட சேவையை முடித்த பின்னர் மீண்டும் அவர்களின் சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறுவார்கள் என்ற உறுதியை இடமாற்றக் கட்டளையிலேயே குறித்து அனுப்பவேண்டுமென வும் இ. த. ஆ சங்கம் கோரியுள்ளது. இம்முறை வருடாந்த இடமாற்றம் பெப்ரவரி 1-ம் திகதியே நடைமுறைப் படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்த க. சே. ஆ குழு செயலாளர் திரு. அரியரத்தினம் கொழும்பு யாழ். மாவட்டங்களில்சேவை செய்யும் சகல ஆசிரியர்களின் சேவை விபரத்தைப் பெறும் பொருட்டு ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு படிவம் அனுப்பப்படும். அப்படிவத்தை ஆசிரியர்கள் பூரணப் படுத்தி அவ்விபரங்கள் சரியானவை என்பதை அதிபர் உறுதிப்படுத்தி திரும்பவும் கல்விச் சேவைக்குழுவிற்கு அனுப்பப் படவேண்டும். அவ்விபரங்களின் அடிப்படை மூலமே ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்கு மாற்றஞ் செய்யப்படுவார்கள். (கொ)

## துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடிமறைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது,

### துப்பாக்கி முனையில் பயமுறுத்தல்

துப்பாக்கி இளைஞர்களில் ஒருவர் தபாலகத்தில் நின்றவர்களையும் தபாலகத்தில வேலைசெய்துகொண்டிருந்த நால்வரையும் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியதுடன் ''சுடுவோம்'' என்றும் எச்சரித்துக் கொண்டிருந்த மூன்ருவது நபர் தபாலகத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டாராம். அச்சூடு சாரதியின் தலைக்கு மேலாகப் பாய்ந்தது என்றும், சாரதி தெய்வாதீனமாகத் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது

நாலாவது நபர், தபாலகயன்னலை நோக்கிச் சுட்டுக் கொண்டே காரை நோக்கிச் சென்று, காருக்குள்ளிருந்த காசாளரின் உதவியாளரிடம் கார்ச் சாவியைத் தரும்படி துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தினுராம் அவர் தன்னிடம் கார்ச்சாவி இல்லைஎன்று தெரிவித்ததும், கொள்ளையர்கள் அவரைக் காரிலிருந்து வெளியே இழுத்துவிட்டு காரின் சக்கரங்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனராம்.

### தபால் ஊழியர் திகைத்து நிற்க...

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டதும் தபாலக ஊழியர்களும் அங்குநின்ற பொதுமக்களும் செய்வதறியாது திகைத்துநிற்க இக்கொள்ளை நாடகம் சில நிமிடங்களில் நடந்து முடிந்தது

### சைக்கிளில் ஓடினர்

தமது கைவரிசையை காட்டிவிட்டு, கொள்ளையர்கள் தபால்கந்தோரில் நின்ற நான்கு சைக்கிள்களையும் எடுத்துக்கொண்டு ஓடிச்சென்ற போது இவர்களது ஒரு சைக்கிளின் செயின் கழன்றுவிடவே அந்தச் சைக்கிளை அவ்விடத்திலே அநாதையாக விட்டுப் பக்கத்திலுள்ள ஒழுங்கையால் ஓடினர் என்றும் அவ்வேளையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது, கொள்ளையர்கள் அந்த ஆசிரியரைத் தாக்கிவிட்டு, அவரின் சைக்கிளைப் பறித்துக் கொண்டு ஓடி மறைந்துவிட்டனராம.

### பொலிசார் வந்தனர்

இத்துணிகரக் கொள்ளை சம்பந்தமாக சங்கானைப் பொலிசாருக்கு அறிவிக்கப் பட்டதும் சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பிரேமதாசா தலைமையில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டி ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணையை மேற்கொண்டது.

யாழ். உதவிப் பொலிஸ்அதிபர் திரு. நவரத்தினராசா, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வார்ஷன் விஜயக்கோன் ஆகியோரும் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

நேற்றுப் பகல் பூராவும், வட்டுக்கோட்டையிலுள்ள முக்கிய வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ்கள் உட்பட தனியார் வாகனங்கள் சைக்கிள்கள் சோதனையிடப்பட்டு பொது மக்களும் பொலிசாரால் விசாரணை செய்யப் பட்டனர். (கொ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகமும். றோட்டரிக் கழகமும் இணைந்து நடாத்தும் இராப்போசன விருந்து இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு யாழ். பாம் கோர்ட்டில் நடைபெறும்.

இவ் இராப்போசன விருந்தில் யாழ். லயன்ஸ் கழக, றோட்டரிக கழக தலைவர்களின் வரவேற்புரையும் லயன்ஸ், றோட்டரி மாவட்ட அதிபதிகளின் உரையும், நாடகமும், நன்றியுரையும் இடம்பெறும்.

## அமெரிக்க...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்புள்ள ஆயுதங்களும் தளவாடங்களும் கிடைக்கும்; சோமாலியாவுக்கு 4 5 கோடி டாலர் ராணுவக் கடனும், 1·27 கோடி டாலர் பொருளாதார உதவியும் கிடைக்கும்'' என்றும் இச்சஞ்சிகை தெரிவித்துள்ளது.


நிலையான வைப்பிற்கு
பிரமிக்கும் வட்டிவிகிதங்கள்!

மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்,
122, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
போன் 8267

25% வட்டியை
வழங்குகின்றது.

குறைந்த வைப்பு ரூ. 500/-

தலைமையகம்:
54, பங்ஷால் வீதி. கொழும்பு-11



பயிற்சி

றேடியோ-ரெலிவிசன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி, சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 27-12-80. அனைவரும் சேரலாம்.. நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்
7684



கோழிச்சேவல்கள் விற்பனைக்கு

திறம் கோழிச்சேவல்கள்—நிறை 2 கிலோ மட்டில் உயிர் நிறை ஒரு கிலோ 25 ரூபா.

பாலசுப்பிரமணியம்
'சகுந்தலம்'
7707 மயிலனி ரோட், சுன்னாகம்.



அறிவித்தல்

திரு. V. T. தர்மதுரை தற்பொழுது எமது ஸ்தாபனத்தில் சேவையில் இல்லையென்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேம். தொடர்ந்து அவரிடம் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு இக் கம்பனி பொறுப்பேற்கமாட்டாது.

ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
7693


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General PostOffice Sri Lanka. under No: GE 8918/78. The Eelanaadu P. B No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 330.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org